# முஸ்லிம் கலைக் கல்லூரி

திருவிதாங்கோடு

நாள்: 15 மார்ச் 2023

## தமிழ்த்துறை தமிழ் ஆய்வு மையம்
## ஒருங்கிணைக்கும் தேசிய கருத்தரங்கம்

# சான்றிதழ்

முனைவர்/ ~~திரு/ திருமதி/ செல்வி~~ ......கா. சேம்...... அவர்கள்

திருவிதாங்கோடு முஸ்லிம் கலைக் கல்லூரி தமிழ் ஆய்வு மையத்தில் நடைபெற்ற

**"தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்"** என்னும் தேசிய கருத்தரங்கில்

......கூ...ற்று...... என்ற தலைப்பில் பங்கேற்றார்/

கட்டுரை வழங்கினார் எனப் பாராட்டி சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **லயன் Dr.H.முகம்மது அலி** | **முனைவர் எட்வின் ஷீலா** | **முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெபமலர்** |
| கல்லூரி தாளாளர் | கல்லூரி முதல்வர் | தமிழ்த்துறைத்தலைவர் |

T. Sam

# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

(தேசிய கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தமிழ்த்துறை ஆய்வு மையம்
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

பாலிகை பதிப்பகம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள் |
| பொருள் | : | ஆய்வுக் கட்டுரைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு மார்ச் 2023 |
| உரிமை | : | பதிப்பாசிரியருக்கு |
| ISBN | : | 9789356 801301 |
| பக்கங்கள் | : | 272 |
| நூலின் அளவு | : | 1/8 டெமி |
| விலை | : | 300 |
| நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு | : | வள்ளியூர் வி. பெருமாள் செல்: 99420 33226 |
| வெளியீடு | : | **பாலிகை பதிப்பகம்** 10/59B, V.R. Building Near Amla Covent, Thuckalay - 629175 |

## ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் ஜா.ஞா.ஜோணிஜெபமலர்

(தமிழ்த்துறைத்தலைவர்)

முனைவர் த.மினி

(உதவிப் பேராசிரியர்)

முனைவர் சு.சௌமியா

(உதவிப் பேராசிரியர்)

## கருத்தரங்க அமைப்பு குழு

முனைவர் த.சேம்

முனைவர் சா.வி.சந்தோஷ்குமார்

முனைவர் மு.முகம்மது அஸ்கர்

முனைவர் ஜா.லாலி ஏதேஷ்

24. ஆற்றுப்படையில் கலைஞர்களின் வாழ்வு 157
- மோ.விஜய சோபா

25. ஊரு நேச்சை கவிதை பிரதி காட்டும் இஸ்லாமிய விழுமியங்கள் 165
- முனைவர் மு.முஹம்மது அஸ்கர்

26. சிலப்பதிகாரம் காட்டும் மானுட விழுமியங்கள் 171
- சோ.ஜெப ஷீலி

27. திரிகடுகம் உணர்த்தும் மானுட விழுமியங்கள் 176
- ச.தினேஷ்

28. பஞ்சவர்ண குகை சிறுகதை தொகுப்பு முன்வைக்கும் புனைக்கதை உலகம் 183
- முனைவர் சௌமியா.சு

29. மணிமேகலையில் மானுட விழுமியங்கள் 191
- முனைவர் சந்தோஷ்குமார். சா.வி

30. அற விழுமியங்கள் முன்னிறுத்தும் மணிமேகலை 197
- பேராசிரியர் ஜோஸ்பிரில்

31. டி.செல்வராஜ் நாவல்கள் கூறும் பெண் திருமண சூழல்கள் 202
- முனைவர் லட்சுமி.சி

32. கலித்தொகையில் பண்பாட்டு விழுமியங்கள் 211
- முனைவர் க.மாரியப்பன்

33. சங்ககாலத்தில் புலப்பாட்டு நெறி 217
- லா.ரா.அனிஷா

34. கூற்று 221
- முனைவர் தா.சேம்

35. குலசேகரப்பட்டினமும் அறம் வளர்த்த நாயகி அம்மனும் 230
- அக்ஸீலியா அனுலா

36. இலக்கிய பார்வையில் திருநங்கைகள் 241
- செ.கிளாறா டெல்பின் ஐடா

34

# கூற்று

**முனைவர். தா. சேம்**
(உதவிப்பேராசிரியர்)
தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

## முன்னுரை

**தொ**ல்காப்பியர் 'கூற்று' என்பதை செய்யுள் உறுப்பாகக் குறிப்பிடுகின்றார். **"இதனை 'கிளவி' என்னும் சொல்லாலும் குறிப்பிடுகின்றார்".**[1] புலவர் தாம் பாடம் பாடல், தாம் கூறுவது போலப் பாடக்கூடாது, நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கென்றே சில மாந்தர்களைப் படைக்கின்றார். அவற்றைக் கேட்பதற்கென்றும் சில மாந்தர்களைக் குறிப்பிடுக் கின்றார். தொல்காப்பியம் பொருளதிகார வழி நற்றிணையில் வரும் கூற்றுக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மாந்தர்கூற்று முறை வகை

கூற்று முறையில் அகப்பாடலை மாந்தர் இரண்டு வகையாகப் பாடலாம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

1. ஒருவர் கூற்று முறையில் மட்டும் அமைத்தல்
2. இருவர் மாறி மாறி உரையாடும் முறையில் அமைத்தல்

**"கலிப்பாவில் நால்வகையுள் ஒன்றாகிய உறள்கலியுள் பாட வேண்டும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்".**[2]

மேலும் ஒருவர் கூற்று முறையை உறள்'கலி நீங்கலாக, வஞ்சிப்பா, ஆசிரியப்பா, வெண்பா, ஏனைய கலிப்பா எல்லாம் ஒருவர் கூற்று முறையில் பாட வேண்டும் என்று அவர் கருத்தென நாம் கருதலாம்.

**"சங்க அகப்பொருள் நூல்களில், கலித்தொகையில் மட்டும் இருவர் மாறி, மாறி உருவாகும் முறையில் சிலப்பாடல்கள் அமைந்துள்ளன".[3]**

அப்பாடல்கள் எல்லாம் தொல்காப்பியர் மரபின் வழியே தான் இயற்றப்பட்டது.

உறள்கலிக்கு சான்றாக **"பேராசிரியர், இளம்பூரனார், நச்சினார்க்கினியர் என்பவர் கலித்தொகையிலிருந்து இருவர் உரையாடல்களான அமைந்தப் பாடல்களையே சான்றாக விளக்குகின்றார்".[4]**

## நற்றிணையில் கூற்று முறை

நற்றிணைப்பாடல்கள் எல்லாம் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது. இவை எல்லாம் ஒருவர் கூற்று முறையில் அமைந்துள்ளன.

ஆசிரியப்பாவில் அமைந்த குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய சங்கத்தொகையில் உள்ள பாடல்களும் கூற்று முறையில் முற்றும் நற்றிணையை ஒத்தே இயங்குகின்றன. இத்தகுகூற்று பாடல்களை டாக்டர் மு.வரதராசனார் நாடகத்தனிக் கூற்றுவகைப்பாடல்கள் என்கிறார். பாடலில் கூற்று நிகழ்த்தும் ஒருவர் கூறுவதை வைத்தே நிகழ்ச்சிக் கேட்போர் பின்புலம் முதலிய நாடக சார்புகள் அறியப்படுதலின் இப்பாடல்களை அவ்வாறுக் கூறுவது மிகப்பொருத்தமே ஆகும்.

கூற்றிற்குரிய மாந்தர், கூற்றிற்குரிமையில்லாத மாந்தர், கூற்றிற்குரியர் கூற்றுக்கொண்டு கூறப்படல் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆராயப்படுகின்றது.

### (அ) கூற்றிற்குரிய மாந்தர்

தொல்காப்பியம் கூற்றிற்குரிய மாந்தர்களை அகத்திணைப்பாடல்களில் இருவகைகளாக வகைப்படுத்தி மொழிகின்றார்.



1. களவில் கூற்று நிகழ்த்துதற்குரியோர்
2. கற்பில் கூற்று நிகழ்த்துதற்குரியோர்.

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன் முதலியோர், களவில் கூற்று நிகழ்த்துதற்குரியோர்.

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகியோரும், களவில் உள்ள அறுவரும் சேர்த்து கற்பில் கூற்று நிகழ்த்துவருக்குரியோர் ஆவர்.

**"தொல்காப்பியர் மாந்தர் கூற்று நிகழிடங்களை அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய இயல்களில் இருபத்தாறு நூற்பாக்களில் விரிவாகக் கூறுகின்றார்".[5]**

## கூற்றுக்களை மொழியும் பாங்கு

தொல்காப்பியர் மாந்தர் தம் கூற்றுக்களை ஒவ்வொரு இயலிலும் தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழிக் கூற்று என்றவாறு தனித்தனியே கூற்றுக்களைத் தொகுத்து மொழிகின்றாள். அவ்வாறு மொழியும் போது கூற்றுக்களைத் தொகுத்தே மொழிகின்றார். களவினை இயற்கைப் புணர்ச்சி, இடற்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற்கூட்டம் என்றும், கற்பினை மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு என்றும் வகுத்துரைக்கிறார். பிற்காலத்தில் தோன்றிய கோவை நூல்களிலும், நம்பியப்பொருள் போன்ற இலக்கணநூல்களிலும் துறை, கிளவிவாயிலாகக் கூற்றுகளும் அவற்றிற்கு அமைந்த செய்யுள்களும் அகப்பொருள் வரலாற்றுப் போக்கில் ஒழுங்குபடக் கூறப்பட்டிருப்பதைத்

தொல்காப்பியர் கூற்றுக்களை வரலாற்றுப் போக்கில் நிரல் பட அமையுமாறு பெரிதும் கூறவில்லை.

சான்றாக களவியலில் **"நெறிபடுநாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்"[6]** என்பது தலைவி நிகழ்த்தும் முதல் கூற்று.

தொல்காப்பியர் கூற்றுக்களைச் சூழலுக்கு தக வகுத்தும், வரலாற்றுப் போக்கில் நிரல்படத் தொகுத்தும் கூறாமைக்குச் சில காரணங்களைக் கூறலாம்.

## கூற்று நிகழும் இடங்களின் தொகை

தொல்காப்பியர் 296 கூற்று நிகழிடங்களை, அகத்திணையில்

குறிப்பிடுகின்றார். ஆனால் அகப்பாடல்களில் 296 கூற்று நிகழிடங்கள் மட்டும் தான் இடம்பெற வேண்டும் என்று விதிக்கவில்லை.

## நற்றிணையில் கூற்று மாந்தரும் பாடல் எண்ணிக்கையும்

நற்றிணையில் இடம் பெற்றுள்ள பாடல்களை துறை அடிப்படையில் நோக்கும் போது 338 பாடல்களுக்கு இரண்டுத் துறையுள்ளது. 3 பாடல்களுக்கு மூன்றுத் துறைகளும் உள்ளது.

தலைவன் கூற்றாக குறிக்கப்பட்டுள்ள பாடல்களில் ஒரு பாடல் கண்டோர் கூற்றாகவும் தலைவிக் கூற்றுப்பாடல்களில் ஒருபாடல் தலைவன் கூற்றாகவும், தோழிக்கூற்றுப் பாடல்களுள் எட்டுப்பாடல் தலைவிக் கூற்றாகவும், ஒருப்பாடல் தலைவன் கூற்றாகவும், நற்றாய் கூற்றுப்பாடல்களும், ஒரு பாடல் செவிலிக் கூற்றாகவும் பரத்தைக் கூற்றுப்பாடல்களுள் ஒரு பாடல் தோழிக் கூற்றாகவும், கொள்ளப்பட்டுள்ளன.

நற்றிணையில் மாந்தர் கூற்றில் அமைந்த பாடல்களின் எண்ணிக்கை வருமாறு:

1. தலைவன் — 76 பாடல்கள்
2. தலைவி — 91 பாடல்கள்
3. தோழி — 206 பாடல்கள்
4. நற்றாய் — 9 பாடல்கள்
5. செவிலி — 2 பாடல்கள்
6. கண்டோர் — 3 பாடல்கள்
7. பரத்தை — 10 பாடல்கள்
8. பாகன் — 398 பாடல்கள்

மொத்தம் — 398 பாடல்கள்

தொல்காப்பியர் கூறும் கூற்றிற்குரிய மாந்தரையும் ஒப்ப நோக்கின், தொல்காப்பியர் கூறும் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, கண்டோர், பரத்தை ஆகிய எழுவர் கூற்றுகளுக்கே நற்றிணையில் பாடல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியரால் கூற்று நிகழ்த்துதற்குரியோருள் குறிக்கப்படாத பாகன் கூற்றும் நற்றிணையில் காணப்படுகின்றன.



தொல்காப்பியர் மாந்தர் பால் எந்தெந்தச் சூழலில் என்னென்ன கூற்றுகள் நிகழும் எனக் குறிப்பிடுகின்றார்.

### 1. தலைவன் கூற்று

தொல்காப்பியர் கூறும் தலைவன் கூற்றுக்கள் எண்பத்துநான்கு. இவற்றை ஐந்து நூற்பாக்களில் மொழிகின்றார். நற்றிணையில் எழுபத்தாறு பாடல்கள் தலைவன் கூற்றாக அமைந்துள்ளன.

இக்கூற்றுகளுக்கும், பாடல்களும், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கி மதியுடம்பாடு, சேட்படை, இரவகைக்குறி, உடம்போக்கு, மலிவு, ஊடல் அல்லது பரத்தையிற் பிரிவு, பிரியுமிடம், இடைசுரத்தழுங்கல், வினையிடம், வினைமுற்றிமீனல், தனித்திருத்தல் என்னும் பதினான்கு சூழல்களுக்குத்தக வகுத்துக் கொள்ளப்படுகின்றன.

### 2. தலைவிக் கூற்று

**"தொல்காப்பியர் கூறும் தலைவிக் கூற்றுகளாக ஈண்டுக் கொள்ளப்படுவன எழுபத்திரண்டு".**[7] நற்றிணையில் தலைவி கூற்றாக அமைந்த பாடல்கள் தொண்ணுற்றொன்று, இக்கூற்றுகளும், பாடல்களும் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைபாடு, பாங்கற்கூட்டம், பாங்கி மதியுடம்பாடு, குறைநயப்பு, இருவகை குறி, ஒருவழித்தணத்தல், வரைவு வேட்கை, மலிவு, ஊடல், பிரிவு என்னும் பதினொரு பதிவகளில் வகுத்தமைக்கப்பட்டுள்ளன.

### 3. தோழிக் கூற்று

**"தோழி தானே செவிலி மகளே"**[8] தொல்காப்பியர் கூறும் தோழிக்கூற்றுகள், ஐம்பத்தெட்டு, இவற்றை அவர் மூன்று நூற்பாக்களில் தொகுத்து மொழிகின்றார். நற்றிணையில் தோழிக் கூற்றாக அமைந்த பாடல்கள் இருநூற்றாறு. இக்கூற்றுக்களும், பாடல்களும் பாங்கி மதியுடம்பாடு, சேட்படைக் குறைநயப்பு, இருவகைக்குறி, ஒருவழித்தணத்தல், வரைவுகூடாதல், வரைவு வேட்கை, வரைவு நீட்டிப்பு, அறத்தொடுநிற்றல், வரைவிடைப்பொருள் வயிற்பிரிவு, வரைவு மலிவு, உடன் போக்கு, மலிவு, ஊடல், பிரிவு என்னும் பதினைந்து சூழல்களுக்குத் தக வகுத்துக் கொள்ளப்படுகின்றன.

### 4. நற்றாய்க்கூற்று

தலைவியை ஈன்ற தாய் இவளே, செவிலியையும் தாய் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தமையின் அவளினின்று இவளை வேறுபடுத்திக் காட்ட இவளது முறைப்அபயரோடு 'நல்' என்ற அடைபுணர்த்தினர்.

நற்றாய் நிகழ்த்தும் கூற்றுக்களைத் தொல்காப்பியர் அகத்திணையியலில் மொழிகின்றார். மொத்தம் பத்துக்கூற்றுகளாக உடன் போக்குத் தொடர்பானவை. மேலும் களவியலில் செவிலிக்கு உரியவனாகக் கூறப்படும் பதிமூன்று கூற்றுகள் இவளுக்குப் பொருந்தி வருவதும் உண்டு எனவும் இயம்புகின்றார். எனவே நற்றாய் நிகழ்த்தும் கூற்றுகள் இருபத்து மூன்று எனலாம். **"நற்றிணையில் நற்றாய் கூற்றில் அமைந்துள்ள பாடல்கள் ஒன்பது"**[9] இவை யாவும் உடன் போக்குப் பாடல்களேயாகும்.

### 5. செவிலிக் கூற்று

செவிலி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியர் மொழிவன பதினைந்து. **"நற்றிணையில் இரண்டு"**[10] பாடல்கள் செவிலிக்கூற்றாக அமைந்துள்ளன. களவில் செவிலி நிகழ்த்தும் கூற்று நிகழிடங்களாகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்படுவது மூன்று. கற்பில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியர் கூறுவன இரண்டு.

### 6. கண்டோர் கூற்று

உடன்போக்கு மேற்கொண்டொழுகும் தலைவன் தலைவியரை இடைச்சுரத்தில் காண்பவராகவும், தலைவன் வினைவயிற் பிரியும் போதும், மீளும் போதும் அவனை வழியிடைக்காண்பவராகவும் அகத்திணைப்பாடல்களில் இவர்கள் பெரிதும் இடம் பெறுகின்றனர். **"தொல்காப்பியர் கண்டோர் கூற்றாகக் கூறுவன ஏழு".**[11] இவையாவும் உடன் போக்குத் தொடர்பானவை, நற்றிணையில் இவர்கள் கூற்றில் அமைந்தள்ளப் பாடல்கள் மூன்று. நற்றிணையில் உடன் போக்கில் கண்டோர் கூற்றாக அமைந்துள்ளப் பாடல்கள் இரண்டு.

### 7. பரத்தைக்கூற்று

தொல்காப்பியர் செய்யுளியலில் கூற்றிற்கு உரியவரைக் குறிப்பிடும் போது இவளைப் பரத்தை என்றும், கற்பியலில் இவளது கூற்றுக்களைத் தொகுத்து மொழியும் போது "காமக்கிழத்தி" என்றும் கூறுகின்றார். அகத்திணைப் பாடல்களில் இவள் சிறப்புடையவளாகவே விளங்குகின்றாள். **"காமக்கிழத்தியின் கூற்றுகளாகத் தொல்காப்பியர் நவில்வன எட்டு"**[12] நற்றிணையில் இவள் கூற்றாக அமைந்துள்ளப்பாடல்கள் பத்த. நற்றிணையில் அகப்பொருள் வளர்ச்சி நிலையில் புதிதாய் கிளைத்த பரத்தைக் கூற்றுகளில் அமைந்துள்ள பாடல்கள் ஐந்து. இப்பாடல்கள் நான்கு, கூற்று நிகழிடங்களில் அமைந்துள்ளன.

### 8. பாகன் கூற்று

**"நற்றிணையில் பாகன் கூற்றில் ஒருபாடல் அமைந்துள்ளது"**[13] தொல்காப்பியர் பாகன் கூற்றுக்குறித்து எதுவும் கூறவில்லை.

### 9. பார்பான் கூற்று

**"பார்ப்பானென் பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான் என்று பேராசிரியர் பகர்கின்றார்"**[14] தொல்காப்பியர் புறத்திணையில் அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும் என்றவிடத்து, நால்வரணத்தில் முதலில் கூறப்படும் அந்தணரையே 'பார்ப்பான்' என்று மொழிகின்றார். திருவள்ளுவர் அந்தணரைப் 'பார்ப்பான்' என்று குறிப்பிடுகின்றார். பார்பான் கூற்றுக்கள் கற்பியலில் மட்டும் கூறப்படுகின்றன. நற்றிணையில் இவன் கூற்றில் பாடல் இல்லை.

### 10. பாங்கன் கூற்று

தலைவனுக்கு உயிர்த் தோழன் பாங்கன். **"தலைவன் கூறிய மொழிகட்கு எதிர்மொழி உரைத்தல் பாங்கனுக்கு உரியது".**[15] "தலைவன் கூறாமல் அவன் குறிப்பறிந்து கூறல் பாங்கனிடம் அருகியேத் தோன்றும்"16. பாங்கன் கூற்றுகளாகத் தனியே தொல்காப்பியர் கூறாவிடினும், பாங்கற் கூட்டத்தில் தலைவன் கூற்றுகளாக அவர் கூறுவனக் கொண்டு அவை யாவை என ஓரளவு உயர்த்துணரலாம்.

### 11. கூத்தர் கூற்று

நாடகக் கலையில் வல்லவர்கள் கூத்தர். கற்பில் மட்டும் கூற்று நிகழ்வதற்கு உரிமைப்படைத்த இவர்கள் தம் கூற்றுகளாகத் பத்தனைத் தொல்காப்பியர் கற்பியலில் மொழிகின்றார்.

### 12. பாணர் கூற்று

யாழிசைத்து பாடி பிறரை மகிழ்விப்பதில் வல்லவன் பாணன். கூத்தருக்குக் கூறப்பட்டுள்ள பத்து கூற்றுகளில் இறுதியிரண்டு கூற்றுகளும் பாணருக்கு உரியவனாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

### 13. விறலி கூற்று

ஆடற்கலையில் வல்ல மங்கை விறலி, நற்றிணைக்குத் அறைவகுத்தவர்கள் இவளைப் பரத்தையின் தோழியாக கொண்டுள்ளனர். நற்றிணையில் இவள் கூற்றில் பாடல் அமையவில்லை. இரண்டுப் பாடல்களில் தலைவியின் ஊடலைத் தணிக்கத் தலைவன் பொருட்டு வாயிலாக இவள் செல்கின்றாள் என்பது மட்டும் அறியப்படுகின்றது.

### 14. அறிவர் கூற்று

நம்பியகப்பொருள் 'அறிவரை' தலைவன் தலைவி ஆகியோருக்கு உறுதி மொழிகளைக் கூறும் பெரியோராகக் கூறுகின்றது. கலித்தொகை சோதிடராகக் குறிப்பிடுகின்றது. **"கற்பில் செவிலிக்கு உரியவனாக கூறப்பட்ட கூற்றக்கள் இரண்டும் அறியவர்க்கும் உரியன என்று தொல்காப்பியர் மொழிகின்றார்".**[17] நற்றிணையில் இவர்கள் கூற்றில் பாடல் இல்லை.

### 15. இளையர் கூற்று

இளையர் எனப்படுபவர் தலைவனுக்க அமைந்த தோழர்கள். கூற்றிர்க்கு உரியோருள் குறிக்கப்படாத இவர்கள் நிகழ்த்தும் கூற்றுக்கள், கற்பியலில் மொழியப்படுகின்றன. நற்றிணையில் பாடல் அமையப் பெவில்லை.

### முடிவுரை

தொல்காப்பியர் பொருளதிகாரவழி நற்றிணையில் வரும் கூற்றுக்கள் குறித்து தெளிவாக குறிப்பிடுகின்றார். மாந்தர்களின் கூற்றுகளாக தொல்காப்பியர் இருநூற்றுத்தொண்ணூற்றாறு என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் தமது காலத்தும், தமக்கு முற்பட்ட காலத்தும் தோன்றியிருந்த அகத்திணைப் பாடல்களில் கண்டறிந்த எல்லாக் கூற்றுக்களையும் கூற வில்லை.



### குறிப்புகள்

1. தொல். பொருள். 313
2. மேலது .442
3. கலி, 87,88
4. தொல். பொருள். 458
5. மேலது. 36,39,40,41
6. மேலது. 16, 111
7. தொல். பொருள். 105 இளம்
8. தொல். பொருள். 125 நச்
9. நற். 29,66,143,179,184,271
10. மேலது. 110,198
11. தொல். பொருள். 40
12. மேலது. 151
13. நற். 121
14. தொல். பொருள். 501 பேரா உரை
15. மேலது. 182 நச்
16. மேலது 183 நச்
17. தொல். பொருள் 154